விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 092 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 07 வெள்ளிக்கிழமை (21.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# மே 6 உள்ளூராட்சித் தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

**2025** உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.செம்மணியில் வீதி விபத்து
### குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செம்மணி ஏ9 வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த இராசலிங்கம் கேசவன்

15ஆம் பக்கம் பார்க்க

## மானிப்பாயில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் பெருமளவு போதை மாத்திரைகளுடன் 27 வயது இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம்

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண மாவட்டத்தில்
### 114 கட்சிகள், 23 சுயேட்சைக்குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 114 கட்சிகள், 23 சுயேட்சைக்குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுப் பத்திரம் ஏற்றுக் கொள்ளல் தொடர்பான ஊடக சந்திப்பு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கருத்துரைத்த தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் யாழ்ப்பாண மாவட்டத்திலே

15ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 34 வேட்புமனுக்கள் ஏற்பு

(முல்லைத்தீவு)

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் நான்கு பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்காக 38 அணிகள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்தன.

அதில் 34 அணிகளின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 2 அரசியல் கட்சிகளதும் 2 சுயேட்சைக் குழுக்களினதுமாக 4 வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான அ.உமா மகேஸ்வரன் தெரிவித்தார்.

02ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் மீனவர்கள் இருவர் தமிழகத்தில் மீட்பு
### கடற்றொழிலுக்குச் சென்றவேளை 5 நாட்கள் காணாமல் போயிருந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகரிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்றவேளை காணாமல் போயிருந்த இரு மீனவர்கள் தமிழக கடலோரக் காவல் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் தொண்டி

15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாண மாநகர சபை
### ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணியின் மனுக்கள் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல்

15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா மாவட்டத்தில்
### 1,231 வேட்பாளர்கள் வேட்புமனுத் தாக்கல்

(வவுனியா)

எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் 103 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 1,231 வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ள

15ஆம் பக்கம் பார்க்க

## இறைவரி சட்டமூலம்
### சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரி சட்டமூலம் நேற்றுப் பாராளுமன்றத்தில் திருத்தமின்றி

15ஆம் பக்கம் பார்க்க

## அர்ச்சுனா எம்.பியின்
### வேட்புமனுக்கள் அனைத்து சபைகளிலும் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சுயேட்சைக்குழுவின் அனைத்து வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 11 சபைகளில் அர்ச்சுனா எம்.பியின் சுயேட்சைக்குழு வேட்புமனுக்களைத் தாக்கல்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று நிலைக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் 38 வேட்பு மனுக்கள் தாக்கல்

## 8 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி மன்றங்களுக்கு 38 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத் தாட்சி அலுவலருமான க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நான்கு சபைகளுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தது. மன்னார் நகர சபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்களாக நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வாறு வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தது.

கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் சுயேட்சைக் குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் உள்ளடங்களாக 45 பேர் கட்டுப்பணத்தைச் செலுத்தியிருந்தனர்.

அவற்றில் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் உள்ளடங்களாக 38 பேருடைய வேட்பு மனுக்கள் கிடைக்க பெற்றிருந்தன.

மன்னார் நகர சபையில் 9 கட்சிகளினதும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப் பெற்றது. முசலி பிரதேச சபைக்கு 9 கட்சிகளினதும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றன.

நானாட்டான் பிரதேச சபைக்கு 7 கட்சியினதும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றன. மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 9 கட்சியினதும் ஒரு சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றன. முசலி பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 8 வேட்பு மனுக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, சர்வஜனம் அதிகாரம் ஆகிய நான்கு கட்சிகளினதும் சுயேட்சைக்குழு ஒன்று உள்ளடங்களாக 5 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மன்னார் நகர சபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் சுயேட்சைக்குழு உள்ளடங்களாக 2 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான க.கனகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ம-7,285)

# தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளராக

## விரிவுரையாளர் கபிலன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாநகர சபை மேயர் வேட்பாளராக சிரேஷ்ட விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)

# 17 கட்சிகள், 5 சுயேட்சைக் குழுக்கள் கிளிநொச்சியில் வேட்புமனு தாக்கல்

(கிளிநொச்சி)

உள்ளூராட்சித் தேர்தலில் இம்முறை கிளிநொச்சியின் இரு பிரதேச சபைகளுக்கும் 17 கட்சிகளும் 5 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளதுடன் அவற்றுள் மூன்று அரசியல் கட்சிகளினதும் மூன்று சுயேட்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கிளிநொச்சியின் கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் ஏற்பு தொடர்பிலான ஊடகச் சந்திப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் முரளிதரன், மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சிவராசா தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இதன்போது கருத்துரைத்த உதவித் தேர்தல் ஆணையாளர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு ஏழு கட்சிகளும் இரு சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்திருந்தன. அதில் ஒரு சுயேட்சைக் குழுவினது வேட்புமனு மாத்திரம் நிராகரிக்கப்பட்டது. அதேவேளை கரைச்சி பிரதேச சபைக்கு 10 அரசியல் கட்சிகளும் மூன்று சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்திருந்தன.

இவற்றுள் மூன்று கட்சிகளினதும் 2 சுயேட்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரு உள்ளூராட்சி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் 14 கட்சிகளினதும் 2 சுயேட்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. (ம-7)


# மரண அறிவித்தல்

மலர்வு

25 - 02 - 1942



உதிர்வு

20 - 03 - 2025

## திருமதி கெங்காதேவி சிவசோதி

சங்கானை மாலியவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி சிவசோதி அவர்கள் நேற்று 20.03.2025 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வைத்திலிங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி நடேசர் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசோதி(ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும் சிவகெங்காதரன் (மாகாணப் பணிப்பாளர் - கைத்தொழில் அபிவிருத்தி சபை - யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு தாயாரும் ஜெயந்தியின் பாசமிகு மாமியாரும் பானுஹரன், உமாதரன், ரிவியா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் இராஜகுலசிங்கம், காலஞ்சென்ற மல்லிகாதேவி, கிருஷ்ணபகவான் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 21.03.2025 வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 949 7924

(940)



# பொதுக்கூட்ட அறிவித்தல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாக்கள் சபையினரால் ஆலயத் தொண்டுகளை சீரமைக்கும் நோக்கில் 06.04.2025 ஞாயிறு காலை 10.00 மணிக்கு கலாசார மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைத்து உபயகாரர்களையும் தொண்டர் சபை உறுப்பினர்களையும் கலந்துகொண்டு ஆலயத் தொண்டுகளை சீர் செய்ய உதவுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

நன்றி

செயலாளர்,
தர்மகர்த்தாக்கள் சபை,
அளவெட்டி கும்பழாவளைப்
பிள்ளையார் கோயில்.

21.03.2025

(3708)



# 31ம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனை



சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபையின் முன்னாள் முகாமையாளர் எமது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய திரு.சண்முகராஜா (சுகி) அவர்களின் அன்பு மனைவி

அமரர் திருமதி

## ஜெயலட்சுமி சண்முகராஜா

அவர்களின் மறைவு எம் எல்லோரையும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு, அமரத்துவம் அடைந்து 31 ஆம் நாளான இன்று அன்னாருக்கு நினைவஞ்சலி செய்து அன்னாரின் ஆத்மா தங்கு சங்களைப்பதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் பாதக் கமலங்களில் சிவலோகப் பிராப்தியடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆதீன பிரதம குருக்கள் ஐயா குடும்பத்தவர்கள்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில், சுதுமலை, மானிப்பாய்

(C-2599)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதியளிக்கவில்லை

## பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க



**(கொழும்பு)**

**பட்டதாரிகளுக்கு அரசாங்க தொழில் வாய்ப்பு வழங்குவதாக தாம் கூறவில்லை என கைத் தொழில் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.**

பட்டதாரிகளுக்கு அரசாங்க தொழில்கள் வழங்குவதாக நாம் உறுதிமொழி வழங்கியதில்லை.

சுமார் 23 000 பேருக்கு மட்டுமே அரசாங்கத் தொழில் வாய்ப்புக்களை வழங்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க முயற்சியான்மைகளுக்காக இந்த ஆண்டில் பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தனியார்துறை தொழிற்சந்தைக்கு பொருந்தக்கூடிய வகையில் நபர்களுக்கு பயிற்சி வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தொழில் வாய்ப்புக்களை தொடர்ந்து வழங்க முடியாது எனவும் கடந்த அரசாங்கம், தொழில்வாய்ப்புக்களை அதிகளவில் வழங்கியதனால் வெற்றிடங்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## பால் தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிப்பால், பால் தேநீரின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்கும் என்று அகில இலங்கை உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்தார்.

அதன்படி, ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஒரு கோப்பை தேநீரின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மாவின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இலங்கையில் சி.ஐ.ஏயின் இரகசிய தளம்

## கென்னடி கொலை குறித்த ஆவணங்களில் தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ஜோன்எவ் கென்னடி கொலைகுறித்த ஆவணங்கள் மூலம் இலங்கையில் அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ தளம் இயங்கியது குறித்த விபரங்கள் தெரிய வந்துள்ளன.

ஜோன் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பான 80 ஆயிரம் பக்க ஆவணங்களை அமெரிக்க அரசு வெளியிட்டுள்ளது. அந்நாட்டின் தேசிய ஆவணக் காப்பகத்தில் இந்த ஆவணங்கள் மக்கள் பார்வைக்கு காணக் கிடைக்கிறது.

கோப்புகளில் உள்ளவற்றைக் கண்டு அமெரிக்க மக்கள் அதிர்ச்சியடைவார்கள் என்று வெள்ளை மாளிகையின் துணை ஊடகச் செயலாளர் ஹாரிசன் ஃபீல்ட்ஸ் கூறினார். ஆவணங்கள் எந்தவித திருத்தங்களும் இல்லாமல் வெளியிடப்பட்டுள்ளது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இந்நிலையில் ட்ரம்பினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள ஆவணங்களில் பனிப்போர் காலத்தில் சி.ஐ.ஏயின் நடவடிக்கைகள் குறித்த விபரங்கள் காணப்படுகின்றன.

அதில் இலங்கை உட்பட பல நாடுகளில் சி.ஐ.ஏயின் இரகசியத்தளம் இயங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இது இலங்கை அரசியல் களத்தில் புதிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (நி-8)

## தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளதாகத் தேயிலை தரகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கடந்த மாதம் 2.04 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையுடன் ஒப்பிடுகையில் 1.9 மில்லியன் கிலோகிராம் குறைவாகும் எனத் தேயிலை தரகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-8)


## தேசபந்துவிற்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தினால் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து நேற்று பிற்பகல் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் தேச பந்து தென்னகோன் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)






**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் 2ஆம் நாள் நிகழ்வு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.**

பாராட்டி மகிழ்கின்றோம்



வலம்புரிப் பத்திரிகையின்
செய்தி ஆசிரியர்
திரு
**கணேசமூர்த்தி மதீசன்**
அவர்கள்,
யாழ். பல்கலைக்கழகத்தின்
39ஆவது பொதுப்பட்டமளிப்பு
விழாவில்
**தமிழில் முதுமாணி (MA)**
பட்டம் பெற்றமையையிட்டு
பாராட்டி வாழ்த்துவதுடன்
அவர் மேலும்
பல பட்டங்கள் பெற்று
வாழ்வில் உயர மனதார
வாழ்த்தி மகிழ்கின்றோம்.
**வலம்புரிக் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள் (29.03.2025-03.06.2027)



29.03.2025 அன்று சனி பகவான் கும்ப இராசியில் இருந்து மீன இராசிக்கு மாறுகிறார். மீன ராசிக்கு வரும் சனி பகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை காலத்துக்கு இந்த இராசியில் சஞ்சாரம் செய்து அருளாசி வழங்குவார்.

மீன இராசியில் இருந்து தனது மூன்றாம் பார்வையால் ரிஷப ராசியையும், ஏழாம் பார்வையால் கன்னி இராசியையும், பத்தாம் பார்வையால் தனுசு இராசியையும் பார்க்கிறார்.

## மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் மிதுனராசி நேயர்களே!

**மிதுனம்:** மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும், மரியாதை கொடுக்கும் மிதுன இராசி நேயர்களே! நீங்கள் எதிலும் அறிவார்ந்து செயற்படுபவர். வெளிவட்டாரப் பழக்கங்களை விரும்பும் தாங்கள் ஒரு சிறந்த பண்பாளர். இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம்.

**கிரகநிலை:** இதுவரை உங்களது பாக்கிய ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி தொழில் ஸ்தானத்திற்கு செல்கிறார். மூன்றாம் பார்வையால் அயன சயன போக ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் சுக ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:** இடம் பெயரும் கர்மகாரகன் சனியால் உங்களின் பொருளாதார நிலை மேம்படும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை செலுத்துவீர்கள். பொதுநலக் காரியங்களில் ஆர்வம் அதிகரிக்கும். திருமணம் தடை பட்டவர்களுக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் கைகூடும். குழந்தை இல்லாதோர்க்கு மழலைச் செல்வம் கிடைக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். உபய ராசியில் சஞ்சரிக்கப் போகும் சனி பகவானால் மகிழ்ச்சி தரும் பயணங்களை மேற் கொள்வீர்கள். அதன் மூலம் வருமானமும் பெருகும்.

உங்கள் செயல்களை நேர்மை யான பாதையில் செவ்வனே செய்து முடித்து அனைவரின் பாராட்டுக ளையும் பெறுவீர்கள். பங்குச் சந்தை முதலீடு போன்ற இனங்கள் மூலம் திடீர் பணவரவு உண்டாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடுகளைச் சிறப் பாகச் செய்வீர்கள். தர்ம காரியங்க ளுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள். நல்ல குருநாதரிடம் தீட்சை பெறும் பாக்கியமும் உண்டாகும்.

உடல்நலனைப் பொறுத்தவரை பலருக்கு சரியான நேரத்தில் உணவு உட்கொள்ள முடியாமல் பணிகள் கசக்கிப் பிழியக் கூடும். இதனால் உடலில் அவ்வப்போது சோர்வு உண்டாகும். போட்டிகளைச் சமாளிப்பீர்கள். கடினமான காரி யங்களையும் குறிப்பிட்ட காலத் திற்குள் முடிப்பீர்கள். உங்களின் உடல் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும். புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி பெறுவீர்கள். உங்கள் நடையில் மிடுக்கு உண்டாகும். அவ்வப்போது சிறு உடல் உபா தைகள் தோன்றி மறையும்.

வசிக்கும் வீட்டை பழுது பார்ப்ப தற்குச் சிறிது செலவு செய்ய நேரிடும். மறைமுக எதிர்ப்புகள் ஏற்பட்டாலும் அவற்றை சாதுர்யமாகச் சமாளிக்க சனி பகவான் உதவுவார். சிலர் புதிய இல்லங்களுக்கு மாறுவார்கள். உங்களுக்கு பேராற்றல் உண்டா கும். புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வீர்கள். சாமர்த்தி யசாலி என்று பெயர் எடுப்பீர்கள். உற்றார், உறவினர்கள் உங்களுக்கு உதவிகரமாக நடந்து கொள் வார்கள். நல்ல செய்திகள் உங் களை வந்தடையும். இதனால் மகிழ்ச்சிக் கடலில் திளைப்பீர்கள்.

உத்தியோகத்தர்கள் கடின உழைப்பைத் தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றவும். சுணக் கத்திற்கும் சோம்பலுக்கும் இடம் கொடுக்காமல் பணியாற்றினால் மேலதிகாரிகளின் ஆதரவை எளிதில் பெறலாம்.

எப்போதும் நிதானமாகவே பேசி சக ஊழியர்களின் அன்பைப் பெறவும். இதற்குப் பயனும் உண்டு. உங்கள் உடல் உழைப்பிற்கு மேல் இரண்டு மடங்கு வருமானத்தைக் காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்பு கள் கிடைக்கும். பயணங்களும் பலன் தரும்.

வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கல் விடயங்கள் சாதகமாக முடிவடைந்தாலும் உங்கள் செயல்களில் கூடுதல் அக்கறை காட்டவும். மற்றபடி சமுதாயத்தில் உங்கள் மதிப்பு, மரியாதை அதி கரிக்கும். புதிய சந்தைகளைத் தேடிச் சென்று வியாபாரத்தை விரிவு படுத்துவீர்கள். புதிய முதலீடு களையும் துணிந்து செய்யலாம்.




அரசியல்வாதிகளுக்கு சங்க டங்கள் குறையத் தொடங்கும். எதிர்கட்சியினர் உங்களைப் பற்றிக் குறை சொல்வதைக் குறைத்துக் கொள்வார்கள். தொண்டர்கள் உங்கள் பெருமைகளைப் புரிந்து கொள்வார்கள். கட்சி மேலிடத்தின் ஆதரவுடன் மனதிற்கினிய பொறுப் புகளைப் பெறுவீர்கள். உயர்ந்த வர்களின் நட்பு கிடைக்கும். கட்சிப் பிரசாரங்களில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். அதேசமயம் எவ ரையும் குறைத்து மதிப்பிடாமல் செயலாற்றவும்.

கலைத்துறையினருக்கு திற மைக்கேற்ற புகழும், கௌரவமும் கட்டாயம் கிடைக்கும். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவையான உதவிகளைப் பெறு வீர்கள்.

அமைதியாகச் செயலாற்று வீர்கள். சில விரையங்களும் அவ்வப்போது உண்டாகும் என்ப தால் சேமிப்பு விடயங்களில் கவனமாக இருப்பது நல்லது.

பெண்களுக்குக் குடும்ப ஒற் றுமை சுமாராகவே இருக்கும். அதே சமயம் குடும்பத்தில் உங்கள் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காமல் நடந்து கொண்டு அமைதி காப் பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி களை நடத்துவீர்கள். ஆடை, ஆப ரணச் சேர்க்கை உண்டாகும்.

மாணவர்கள் புத்திசாலித் தன மாகச் செயற்படுவீர்கள். நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு வாய்ப்பு உண்டாகும். போட்டிகளில் பங்கேற்று பாராட்டைப் பெறுவீர்கள். உடற்பயிற்சிகளை மேற்கொண்டு சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பெற்றோர்களின் அறிவுரைப்படி நடந்துகொண்டு மேலும் சிறப் படையுங்கள்.

**மிருகசிரீடம் 3, 4ஆம் பாதங்கள்:** எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மன உறுதி யுடன் சமாளித்து வெற்றி காண் பீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். பணவரத்து மனமகிழ்ச்சியைத் தரும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினை குறையும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும்.

**திருவாதிரை:** உங்கள் வாக்குவன்மையால் நன்மை ஏற்படும். நோய்நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில், வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங் கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும்.

**புனர்பூசம் - 1, 2, 3 ஆம் பாதங்கள்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, வீண் அலைச்சல் குறையும். எதிர்பார்த்த அதிகாரம், அந்தஸ்து கிடைக்கும்.

சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையில் ஒற்றுமை அதிகரிக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

**பரிகாரம்:** புதன் கிழமை தோறும் அருகிலிருக்கும் சிவன் ஆலயத்திற்கு செல்லுங்கள். முடிந்தவர்கள் பாடல் பெற்ற ஸ்தலங்களுக்கும் செல்லலாம். செல்வங்கள் குவியும். தாமரை மலரை அருகிலிருக்கும் பெரு மாளுக்கு அர்ப்பணியுங்கள், அவர் எல்லாவற்றையும் சீராக நடத்தி வைப்பார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works:


| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required ICTAD Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE /C2/2025/01 | Supplying & Laying Floor Tiles at Faculty of Medicine, University of Jaffna | 12.7 | 75 | C7 or above | Rs. 127,000.00 21.07.2025 | Rs. 5,000.00 |
| 2 | YA/CWP/RE /C2/2025/02 | Establishment of Dean's Office, Mini Board Room and other Related Structures at the Administration Block, Faculty of Siddha Medicine, University of Jaffna | 6.46 | 60 | C8 or above | Rs. 65,000.00 21.07.2025 | Rs. 2,000.00 |
| 3 | YA/CWP/RE /C2/2025/03 | Improving Washroom facilities for Department of IT at Second Floor of the New Exam Hall, University of Jaffna | 1.11 | 60 | C9 or above | Rs. 12,000.00 21.07.2025 | Rs. 1,000.00 |
| 4 | YA/CWP/RE /C2/2025/04 | Supplying & Laying Interlock Paving Path way at Sir Ponnambalam Ramanathan Faculty of Performing and Visual Arts, University of Jaffna | 2.69 | 45 | C9 or above | Rs. 27,000.00 21.07.2025 | Rs. 1,000.00 |
| 5 | YA/CWP/RE /C2/2025/05 | Fabricating, Supplying & Fixing of Movable Shed (10 Nos) with Necessary Civil Works for Stone Bench at Main Premises, University of Jaffna | 3.7 | 30 | C9 or above | Rs. 37,000.00 21.07.2025 | Rs. 1,200.00 |
| 6 | YA/CWP/RE /C2/2025/06 | Fabricating, Supplying & Fixing of Shed (04 Nos) With Necessary Civil Works for Stone Bench at Main Premises, University of Jaffna | 1.25 | 30 | C9 or above | Rs. 12,500.00 21.07.2025 | Rs. 1,000.00 |
| 7 | YA/CWP/RE /C2/2025/07 | Improvement to Administration Building, Faculty of Agriculture, University of Jaffna at Ariviyalnagar Kilinochchi | 2.44 | 60 | C9 or above | Rs. 25,000.00 21.07.2025 | Rs. 1,000.00 |
| 8 | YA/CWP/RE /C2/2025/08 | Construction of 7.65m INT. DIA 10.0m Depth Dug Well, University of Jaffna at Ariviyalnagar, Kilinochchi | 4.83 | 90 | C8 or above | Rs. 25,000.00 21.07.2025 | Rs. 1,700.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs.** Contact numbers are: Phone: 021 221 9201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna from 24th March 2025** until **08th April 2025** from **9:00 hrs to 16:00 hrs and** upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank, University of Jaffna branch with the Reference No **"970000060000276"** should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch,** to reach **on or before 10.00 hrs on the 09th April, 2025.** Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 09th April, 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **77 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the Board Room, University of Jaffna, Thirunelvely at 10.00 hrs on the 02nd April, 2025 for the bid No. 01 to 06 and at the Engineering Service Division, University of Jaffna, Ariviyalnagar, Kilinochchi at 10.00 hrs on the 01st April, 2025 for the bid No. 07 & 08.

(C-2504)

**Chairman, Department Procurement Committee,**
**University of Jaffna, 21.03.2025**


# வயலில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த யானை மீட்பு



(மன்னார்)

மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விளாங்குளி கிராமத்தில் உள்ள வயலில் இருந்து உயிரிழந்த நிலையில் 18 வயதுடைய யானை ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள வயலுக்குச் சென்றவர்கள் யானை ஒன்று உயிரிழந்து இருப்பதனை அவதானித்ததையடுத்து உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸார், மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், வன ஜீவராசிகள் திணைக்கள வைத்தியர் ஆகியோர் குறித்த வயற் பகுதிக்குச் சென்று உயிரிழந்த யானையைப் பார்வையிட்டதுடன் சடல சோதனைகளை முன்னெடுத்த வேளை குறித்த யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்தமை தெரியவந்தள்ளது.

நீண்டகாலமாக இப் பகுதியில் குறித்த யானை தொடர்ச்சியாக நெற்பயிரைச் சேதப்படுத்தி வந்ததாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில் குறித்த விவசாயக் காணியின் உரிமையாளர் மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின்னர் குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (6-8-285)

# திடீரென தீப்பற்றிய கார்



(தருமபுரம்)

கிளிநொச்சி உருத்திரபுரம் பொறிக்கடவை வீதியில் கார் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த காரினை பெண்ணொருவர் செலுத்தி வந்த நிலையிலேயே இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-316)



வடமராட்சி கரவெட்டி, தெற்கு-மேற்கு பிரதேச சபை மக்களும் பிரதேச சபையும் இணைந்த நிதிப்பங்களிப்புடன் புனரமைக்கப்பட்ட கோவிற் சந்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று சந்தை வளாகத்தில் இடம்பெற்றது.

(படம்- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2025/01

# VALIKAMAM EAST PRADESHIYA SABHA- NORTHERN PROVINCE

1. The **Chairman, Local Authority Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council

2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below..

**" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."**

4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified in **GROUP A** in Table below) and Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in **GROUP B** in Table below)

5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from **2025-03-21 To 2025-04-07** during **09:00 hrs and 15:00 hrs.**

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865,email: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.

7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**

9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha,**
**Puttur .**
**21/03/2025**

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-03-21 To 2025-04-07 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-03-28 |
| | Closing and Opening of Bids | At 2.00 P.M on 2025-04-08 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group A | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council/01/2025/01 | Package 01 * Construction of Nagathampitan veethy- Urelu | 11.45 | 84 | C6 or above (Highway) | 5,000.00 | 115,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| Group B | | | | | | | | |
| NP/14/41(13)/4/Council/01/2025/02 | Package 02 * Construction of Kalaioli veethy 1st lane (masivan joint road) Siruppiddy *Reconstruction of kanthavalavu veethy Avarangal | 9.31 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 94,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/03 | Package 03 * Construction of Ganavairavar joint veethy - Urumpirai * Construction of Sivakula veethy by lane - Urumpirai * Construction of Kadduvairavar kovil veethy - Urumpirai *Reconstruction Kali kovil veethy - Neervely ( R.C School veethy) | 8.26 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 83,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/04 | Package 04 *Construction of Irathampu veethy - Kopay *Construction of Dutch Road by lane - Kopay (Timber shop near road) * Construction of Poyiddy vinobaji veethy 3rd connecting road | 9.48 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 95,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/05 | Package 05 * Reconstruction of Fatima lane - Atchuvely * Construction of Periyapokkanai by lanes - Watharawaththai | 8.44 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 85,000.00 | 22.07.2025 | 24.06.2025 |
| NP/14/41(13)/4/Council/01/2025/06 | Package 06 * Construction of Yogapuram Road 1st,2nd,3rd by lane- Urumpirai * Construction of Vairavar kovil veethy (Bank veethy near road) - Puttur | 9.01 | 84 | C7 or Above (Highway) | 4,000.00 | 92,000.00 | 22.07.2025 | 24.06.2025 |

# INVITATION FOR BID 2025/02

# VALIKAMAM EAST PRADESHIYA SABHA- NORTHERN PROVINCE

1.The **Chairman, Local Authority Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG

2.Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below..

**" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987. The original certificate of registration (PCA 03) shall be submitted with the bid."**

4.Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Docuement

5.Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-03-21 To 2025-04-07** during **09:00 hrs and 15:00 hrs.**

6.A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.

7.Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

8.Pre-Bid **Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**

9.Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

(7 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-03-21 To 2025-04-07 | | | | | |
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-03-28 | | | | | |
| | Closing and Opening of Bids | | | At 01.30 P.M on 2025-04-08 | | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2025/LAR/01 | Construction of Sanga Veethy at Urelu | 10.17 | 84 | C6 or above (Highway) | 4,000.00 | 108,000.00 | 22.07.2025 | 24.06.2025 |

Chairman
Local Authority Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur.

(சி-2507)

21/03/2025

# மகிழ்ச்சியான நாடுகளில் இலங்கை பின்னடைவு


(கொழும்பு)

2024ஆம் ஆண்டு மகிழ்ச்சி குறியீட்டு அறிக்கையின் பிரகாரம் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில், 128 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது. உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் பின்லாந்து எட்டாவது ஆண்டாக முதலி டத்தைப் பிடித்துள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளும் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன. தரவரிசையில் முதல் 20 இடங்க ளுக்குள் ஐரோப்பிய நாடுகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன. இதேவேளை இஸ்ரேல் 8 ஆவது இடத்தில் உள்ளது.

ஹமாஸுட னான மோதலால் இஸ்ரேல் பாதிக்கப்பட்ட போதிலும் 8ஆவது இடத்தில் உள்ளது. மேலும் 147 ஆவது இடத்தில் தற்போது தாலிபான்களின் ஆட்சியில் உள்ள ஆப்கானிஸ்தான் இடம்பிடித்துள்ளது. இதேவேளை இலங்கை 128 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பி டத்தக்கது.

(நி-8)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
**இராமசாமி திருச்செல்வம்**

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்கவில்லை
இன்னும் பல ஜென்மம் எடுத்தாலும்
நீங்களே எங்கள் உறவாக இருக்க
இறைவன் எங்களுக்கு வரம் தர வேண்டும்

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(939)

நீங்கா நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர். **பொன்னுத்துரை இராசமணி**
(அக்கம்மா)

பிறப்பு 30.04.1950 இறப்பு 19.02.2025

நீங்கள் எம்முடன் இல்லை என்றாலும்
உம் நினைவுகள் எம்முடனேயே
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
உங்களை நாம் என்றும் மறவோம்

(சி-2503)



ஜாயன் குடும்பத்தினர், புங்குடுதீவு.

# இராசிபலன்

21.03.2025
பங்குனி 07, வெள்ளிக்கிழமை
சப்தமி பின்னிரவு 12.55 மணிவரை

கேட்டை முன்னிரவு 10.32 மணிவரை
சுபநேரம் 6.17-7.47 மணிவரை
இராகுகாலம் 10.47-12.17மணிவரை

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை.

**வளவன்**




ஒருவேலையை முடிக்க ஒருமுறைக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் மேலோங்கும் நாள், பிரயாண பயமுண்டு.




பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




பிறர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வியாபார வளர்ச்சியுண்டு, ஆரோக்கியமான நாள், உற்சாகமான நாள்.




மற்றவர்கள் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.




பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்கள் அனுகூலம் தரும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம்.




வழிபாட்டில் ஆர்வம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், செயற்பாடுகளில் முன்னேற்றம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




பொது வாழ்வில் புகழ் கூடும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் கூடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், இலாபகரமான நாள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம்.




வெளியூர்ப் பயணங்கள் எண்ணிய படி கைகூடும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**பணிவோடு பேசுபவனை பயந்தாங்கொள்ளி என்று நினைப்பவன் படுமுட்டாள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## அவுஸ்திரேலியாவுடன் கைகோர்த்த கனடா



(ஒட்டாவா)

ஆர்க்டிக் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்தும் விதமாக கனடா அரசு பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் அவுஸ்திரேலிய அரசிடம் ரேடார் தொழில் நுட்ப சாதனங்களை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் குறித்த திட்டத்தின் ஒரு பகுதியாக அவுஸ்திரேலியாவுடன் இணைந்து இராணுவ ரேடார் தொழில் நுட்ப அமைப்பை உருவாக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்க்டிக் பகுதிகளில் அமெரிக்க அரசு தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வரும் நிலையில், கனடா அரசு குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஹோண்டுராஸில் விமான விபத்து 12 பேர் உயிரிழப்பு

(ஹோண்டுராஸ்)

மத்திய அமெரிக்க நாடான ஹோண்டுராஸில், 18 சுற்றுலாப் பயணிகளுடன் பயணித்த சிறிய ரக விமானமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை இவ் விபத்தில் ஐந்து பேர் உயிர் தப்பியுள்ளனர் எனவும் ஒருவர் மாயமாகியுள்ளார் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

# வழங்கிய வ... சில மணிகளில் தவி...

(மொஸ்கோ)

**உக்ரைனின் வலுசக்திக் கட்டமைப்பில... போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி ... ட்ரம்பிற்கு வாக்குறுதியளித்த ஒரு சில மணித்திய... ரஷ்ய ஜனாதிபதி உக்ரைனின் வலுசக்தி கட்டமை... தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்.**

டொனெட்ஸ்க் பகுதியில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கும் எரிசக்தி உட்கட்டமைப்பின் மீது ரஷ்யப் படையினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

முன்னதாக அமெரிக்க ஜனாதிபதியுடனான தொலைபேசி உரையாடலின் போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உக்ரைனுடன் உடனடி யுத்த நிறுத்தத்தை நிராகரித்ததுடன் எரிசக்தி மற்றும் உட்கட்டமைப்புகள் மீது 30 நாட்களிற்கு தாக்குதலை மேற்கொள்ளப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்.

உக்ரைன் சமீபத்தில் சவுதி அரேபியப் பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொண்ட ஒரு மாதகால யுத்த நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள புடின் வெளிநாடுகள் இராணுவ புலனாய்வு உதவிகளை உக்ரைனிற்கு வழங்குவதை நிறுத்தினால் மாத்திரம் முழுமையான யுத்த நிறுத்தம் வெற்றி பெறும் என தெரிவித்திருந்தார்.

இரு தலைவர்களிற்கும் இடையிலான வெளிப்படையான 90 நிமிட தொலைபேசி உரையாடல் முடிவடைந்த பின்னர் உக்ரைனின் எரிசக்தி உட்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறு புடின் உத்தரவிட்டார் என கிரெம்ளின் செய்தி தெ...

மா... ரஷ... உ... மற... ஆ... உ... இ... நிற... மு... கிற... அ... பத...

## சைரன்கள் ஒலியைத் தொடர்ந்து அதிர்ந்தது ஜெருசலேம்!

### மீண்டும் தீவிரமடையும் போர்



(ஜெருசலேம்)

ஏமன் நடத்திய ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலின் பல பகுதிகளில் சைரன்கள் ஒலித்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. ஜெருசலேமில் சைரன்கள் ஒலித்த சிறிது நேரத்திலேயே பலமுறை வெடிச் சத்தங்கள் கேட்டன. இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இதுவரை எந்தத் தகவலும் இல்லை.

ஹமாஸ் உடனான இஸ்ரேலின் போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்ததை அடுத்து, இந்த வாரம் ஏமனின் ஹவுதி குழு மீண்டும் ஏவுகணைத் தாக்குதல்களை தொடங்கியது.


அதன் படி நேற்று அதிகாலை 4 மணித் தாக்குதலின் போது மத்திய இஸ்ரேலில் சைரன்கள் ஒலித்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் தரப்பில் காசா பகுதிகளில் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டு வரும் நிலையில் தாழ்வாதார பகுதி ஒன்றைக் கைப்பற்றியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேலும் ஹமாஸ் தன் வசம் பிடித்து வைத்துள்ள பணயக் கைதிகளை விடுவித்து பிரதேசத்தின் கட்டுப்பாட்டைக் கைவிடும் வரை தாக்குதல்கள் தீவிரமடையும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார். வடக்கு காசாவை தெற்கில் இருந்து பிரிக்கும் நெட்சாரிம் தாழ்வாரத்தின் ஒரு பகுதியை மீண்டும் கைப்பற்றியுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதல்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 400 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இதனைக் காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்தது. (நி-8)

பத... மீ...

நெத...




(ஜெருச... இஸ்ரே... பெஞ்சமி... தனது அதி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வாக்குறுதி ...தவிடுபொடியானது!

...மைப்பினை தாக்கப் ...திபதி டொனால்ட் ...னித்தியாலங்களில் ...கட்டமைப்பின் மீது



...ிற்கு ...னால் ...யுத்த ... என ... ...கும் ...டை ...பேசி ...டந்த ...சக்தி ...தான ...யாக ...த்தர ...சய்தி

தெரிவித்திருந்தது.

கடந்த 2022 பெப்ரவரி மாதம் உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்ததுடன், ஆயுத உதவியும் வழங்கின. இதற்கிடையே, இந்தப் போரை நிறுத்த பிரதமர் மோடி தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறார். கடந்த ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற ட்ரம்பும், போரை நிறுத்துவதில் தீவிரம் காட்டி வருகிறார்.

இதுதொடர்பாக சவுதி அரேபிய தலைநகர் ரியாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

கடந்த 11ஆம் திகதி நடந்த பேச்சுவார்த்தையின் போது 30 நாள் போர் நிறுத்த திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்தது. இந்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஏற்றுக் கொண்டார். ஆனால் ரஷ்யா உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை.

ரஷ்யா போர் நிறுத்தத்தை ஏற்காவிட்டால், பொருளாதாரத் தடை விரிவு படுத்தப்படும் என்று அமெரிக்கா மற்றும் ஜி7 நாடுகள் கடந்த 14ஆம் திகதி எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## 4 கனேடியர்களுக்கு சீனாவில் மரணதண்டனை!

(ஒட்டாவா)

போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் சீனாவில் நான்கு கனேடியர்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக கனடா அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் இரட்டைக் குடிமக்கள், மேலும் அவர்களது குடும்பத்தினரின் வேண்டுகோளின் பேரில் அவர்களின் அடையாளங்கள் மறைக்கப்பட்டுள்ளன என்று கனடாவின் வெளியுறவு அமைச்சர் மெலானி ஜோலி நேற்று முன்தினம் புதன்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தத் தண்டனைகள் "மீளமுடியாதவை மற்றும் அடிப்படை மனித கண்ணியத்திற்கு முரணானவை" என்றும் அவர் கண்டனம் செய்தார்.

இதேவேளை கனேடிய குடிமக்களின் குற்றங்களுக்கான சான்றுகள் "உறுதியானவை மற்றும் போதுமானவை" என்று கூறிய, கனடாவில் உள்ள சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர், ஒட்டாவா "பொறுப்பற்ற கருத்துக்களை வெளியிடுவதை நிறுத்த வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

மேலும், "சம்பந்தப்பட்ட கனேடிய குடிமக்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பீஜிங் முழுமையாக உத்தரவாதம் செய்துள்ளது" என்றும், "சீனாவின் நீதித்துறை இறையாண்மையை" மதிக்க கனேடிய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சீனா இரட்டைக் குடியுரிமையை அங்கீகரிக்கவில்லை, மேலும் போதைப்பொருள் குற்றங்கள் குறித்து கடுமையான நிலைப்பாட்டை எடுக்கிறது.

போதைப் பொருள், ஊழல் மற்றும் உளவு பார்த்தல் உள்ளிட்ட கடுமையான குற்றங்களுக்கு சீனா மரண தண்டனை விதிக்கிறது. மரண தண்டனைகளின் எண்ணிக்கை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும், உலகிலேயே அதிக மரண தண்டனை விகிதங்களைக் கொண்ட நாடுகளில் சீனாவும் ஒன்று என்று மனித உரிமைகள் குழுக்கள்நம்புகின்றன. (நி-8)

## பதவியைத் தக்க வைக்கவே மீண்டும் தாக்குதல்கள்!

### நெதன்யாகுவை சாடிய ஆர்ப்பாட்டக்காரர்கள்



(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்காகவே காசா மீது மீண்டும் விமானத் தாக்குதல்களில் ஈடுபட்டார் என இஸ்ரேலைச் சேர்ந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் ஜனநாயக முறைமையை செயல் இழக்கச்செய்து அதிகாரத்தின் மீதான தனது பிடியைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்காகவே யுத்தநிறுத்தத்தை சிதறடித்த விமானத் தாக்குதல்களிற்கு பெஞ்சமின் நெதன்யாகு உத்தரவிட்டார் என இஸ்ரேலிய ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் உள்நாட்டுப் பாதுகாப்பிற்கு பொறுப்பான புலனாய்வு அமைப்பான சின்பெட்டின் தலைவரைப் பதவி நீக்கம் செய்யப்போவதாக இஸ்ரேலிய பிரதமர் அறிவித்திருந்த நிலையிலேயே காசா மீது விமான தாக்குதலை இஸ்ரேல் மேற்கொண்டது.

"இந்த வான்தாக்குதல் அரசியல் நலனிற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதே யதார்த்தம்,வெளிநாட்டு அச்சுறுத்தல்களை உருவாக்கி, உள்நாட்டில் அரசாங்கத்திற்கு எதிராக குரல் எழுப்புபவர்களை ஜனநாயக விரோதிகள் என சித்தரிப்பதே அவர்கள் வழமையாக செயற்படும் விதம்" எனஇந்த ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தவரும்,இஸ்ரேலியக் கடற்படையின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரியுமான ஒரா பெலெட் நகாஸ் தெரிவித்துள்ளார்.

ஹமாசின் பிடியில் பணயக்கைதிகளாக உள்ளவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகள் இந்த வாரம் இஸ்ரேலில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்துள்ளன.

மேலும் உடனடி யுத்த நிறுத்தத்தினை கோரும் அறிக்கைகளை வெளியிடவுள்ளன.

ஹமாஸிடம் தனது சகோதரன் நடாவ் பொப்லேவெலை இழந்த அய்லெட் ஸ்வாடிஸ்ட்கி ஹமாசிடம் பணயக்கைதிகளாக உள்ளவர்களை இன்னமும் காப்பாற்ற முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

அவர்களை மீட்கலாம், உயிர் பிழைக்காதவர்களை, அவர்களின் உடலை நாட்டிற்கு கொண்டுவந்து கௌரவமான முறையில் புதைக்கவேண்டும்,நாங்கள் மீண்டும்யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் திரும்ப வேண்டும் அனைவரையும் மீள அழைத்து வருவதற்கு உடன்பாடே ஒரே வழி, என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர் காவுவண்டி சாரதியை நியமிக்கக்கோரி

## ஐயன்கன்குள கிராம மக்கள் போராட்டம்



(நெளுக்குளம்)

நோயாளர் காவு வண்டிக்கான நிரந்தர சாரதியை நியமிக்குமாறு கோரி போராட்டமொன்று ஐயன்கன்குளம் கிராம மக்களால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஐயன்கன்குளம் பகுதியில் உள்ள ஐயன்கன்குளம் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையத்தில் நிரந்தர சாரதி இல்லாமையால் குறித்த கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் அதற்குத் தீர்வினைப் பெற்றுத்தரக்கோரி குறித்த வைத்திய சாலை முன்பாகக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். உரிய வகையிலே குறித்த நோயாளர் காவுவண்டி சாரதியை நிரந்தரமாக நியமித்து அடிப்படை வசதிகள் குறைந்த கிராமத்திலே நோய் வாய்ப்படுகின்ற மக்களுக்கான உரிய சேவையை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வடக்கு மாகாண ஆளுநருக்கான ஒரு மகஜரை குறித்த வைத்திய சாலையின் வைத்தியரிடமும் ஐயன்கன்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமும் கையளித்திருந்தமை குறிப்பிடதக்கது. (6-8-299)

# கடலில் விழுந்த வெளி இணைப்பு இயந்திரம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

படகில் இருந்து தவறி விழுந்த வெளி இணைப்பு இயந்திரம் நேற்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பரப்பில் மீனவர் ஒருவரின் வெளி இணைப்பு இயந்திரம் நேற்று முன்தினம் எதிர்பாராத விதமாக தவறி கடலில் விழுந்து காணாமல் போனது.

மாலை மீன்பிடி நடவடிக்கைக்காக கடலில் பயணித்த வேளை சீரற்ற கடல் அலைகளால் படகில் இருந்த 40 குதிரை வலுவுடைய வெளி இணைப்பு இயந்திரம் இவ்வாறு தவறி கடலில் விழுந்தது.

தவறி விழுந்து காணாமல் போன வெளி இணைப்பு இயந்திரத்தை தேடும் பணியில் கட்டைக்காடு மீனவர்கள் ஈடுபட்டு வந்த நிலையில் நேற்று காலை குறித்த இயந்திரம் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளது. (6-8)

# சட்டவிரோத மீன்பிடி வலை வட்டுவாகலில் பறிமுதல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவில் நந்திக்கடல் களப்புகளில் சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டவர்களின் வலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வட்டுவாகல் நந்திக்கடல் களப்பு மற்றும் கொக்குளாய், கொக்குத்தொடுவாய் களப்பு பகுதிகளில் சட்டவிரோத தொழில்களில் ஈடுபட்டவர்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதேவேளை நேற்று முன்தினம் வட்டுவாகலில் 50 கூட்டு வலைகள், 80 நூல் வலைகள் மற்றும் 30 தங்கூசி வலைகள் என்பன கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று கொக்குளாய், கொக்குத்தொடுவாய் களப்பு பகுதிகளில் 150 கூட்டு வலைகளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கையானது முல்லைத்தீவு மாவட்ட நீர்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் மோகன்குமார் தலைமையில், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட தலைவரின் வழி நடத்தலிலும், கடற்படையினர், வட்டுவாகல் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம், கேப்பாபிலவு கூட்டுறவு சங்கம், முள்ளிவாய்க்கால் கிழக்கு அலையோசை கூட்டுறவு சங்கம், செல்வபுரம் கூட்டுறவு சங்கம், கள்ளப்பாடு சித்திவிநாயகர் சங்கம் ஆகியோரது ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (6-8-299)



# யாழ்ப்பாண கம்பன் விழா

## ஒரு விமர்சனப் பார்வை

இந்திரவிழாவாகக் கருதப்படும் "யாழ்ப்பாணக் கம்பன்விழா" இவ்வாண்டு பெப்ரவரி 14,15,16 ஆம் திகதிகளில் காலை- நல்லை ஆதீன கலா மண்டபத்திலும் மாலை -நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்ட பத்திலும் வெகு விமரிசையாக நடை பெற்றது.

பெப்ரவரி 14, திருநாள் மங்கல நிகழ்வின் முதல் நிகழ்வாக மங்கல இசையை பி. ரஜீவன் குழுவினர் இசைத்து மங்கலமாக இவ்வாண்டு விழா நடைபெற வேண்டும் என மனம், மொழி, மெய்களால் வேண்டினர்.

கொடையில் சிறந்தவர், கொள்கையில் உயர்ந்தவர், இடைவிடாத சேவைகளால் நல் இதயங்களில் நிறைந்த எஸ்.வி. எம். குணரட்ணம் தம்பதியர் மங்கல விளக்கு ஏற்றிவைத்தனர்.

பக்தியுடன் இணைந்து தேன் மதுரக் குரலில் சுகன்னியா அரவிந்தன் அவர்கள் கடவுள் வாழ்த்து இசைத்தார்.

ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர், அருட்பணி ம. ஜெறோ செல்வ நாயகம், மௌலவி என். எம். எம். இர்பான்- (நூரி), பொகவந்தலாவ இராகுல தேரர் நிகழ்த்தினர். சொல்லத் துவங்கினால் ஒரு நாள் போதாது. ஒரு நூல் போதாது வணங்கி மகிழ்கின்றேன்.

வாழ்த்துரையினை கௌரவ சி.வி. கே. சிவஞானம் நிகழ்த்தினார். பேச்சை ஒரு தவமாகக் கருதுபவர். ஒவ்வொரு கூட்டத்திலும் பேச தேர்வுக்குத் தயாராகும் மாணவனைப் போல முன்னதாக விரிவான குறிப்புக்கள் எடுத்து சிறந்த ஒரு வாழ்த்துரையை வழங்கினார்.

தலைமையுரையினை மாண்பு மிகு ஜெ. விஸ்வநாதன் நிகழ்த்தினார். எப்பொழுதெல்லாம் ஒரு உற்சாகப்படுத்துதல் தேவைப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் ஏகலைவனின் துரோணரைப் போல் என் கட்டை விரலை மட்டுமல்ல யாருடைய கட்டை விரலையும் கேட்காத துரோணர் இவர்.

தொடக்கவுரையினை யாழ். அரச அதிபர் ம.பிரதீபன் நிகழ்த்தினார். கேட்பவர் மனதை பக்குவமாக்கி, உழ வேண்டிய முறையில் உழுது, இட வேண்டிய உரமிட்டு, விதைக்க வேண்டிய முறையில் விதைக்க வேண்டிய, ஆழம் அறிந்து விதைக்க வேண்டியதை விதைக்கும் "சொல் ஏர் உழவர்"

சிறப்பு நிகழ்வாக "இலக்கிய ஆணைக் குழு" தலைப்பு "மாட்சிமை பெற்ற வாழ்க்கைத் துணை எனும் விருதுக் குரியவர்"



தலைவர்:- முன்னாள் [illegible] ணகுமார். அவர் உயரமும், பேச்சின் உயரங்களும் எல்லோரையும் பிரமிக்க வைத்தது. ஒன்றில் இருந்து ஒன்றாய், பலவாய் பல பெருகி ஓடும் நதியின் ஓட்டத்தைப் போல அவர் பேச்சின் வேகமிருந்தது. நதி கூட ஓடும் வழியில் பாறைகளை மோதி விலகிச் செல்லும் ஆனால் இவரின் பேச்சு பாறைகளற்ற ஓடும் நதியைப் போன்று அமைந்தது. தன் முன் இருக்கும் மானிடக் கடலைத் தன் சொல்வன்மையால் அலை எழுப்பாது அமைதியாக்கிக் கட்டிப் போடும் சொல் மந்திரவாதி. "ஆற்றுப்படுத்தும்" பாணன் ஒருவன் அவருக்குள் இருக்கிறான் என்பதை சபை உணர்ந்தது.

கோசலையே:- என்று ந.விஜய சுந்தரம். இவர் ஓர் உரை வீச்சாளன். தன் மனதில் ஒன்றைத் திண்ணமாய் நினைத்து மேடையேறிவிட்டால் அந்த அவையை அழவைக்கவும் முடியும். சிரிக்க வைக்கவும் முடியும். சிந்திக்க வைக்கவும் முடியும். மூன்றையும் ஒரு சேர நிகழ்த்தவும் முடியும் என்பதை நிருபித்தார்.

"தாரையே" என்று ஐ.கதிர்காம சேகரன். ஒரு சபையை முழுமையாக தன் கையில் எடுத்துக் கொள்வது என்றால் அதை இவரிடம் தான் கற்க வேண்டும் என்பதை நிருபித்தார்.

"மண்டோதரியே" என்று சி.கேசவன். இரு கைகளையும் நீட்டி அப்படியே தன் சொற் கரத்தால் நெஞ்சோடு அணைத்துப் பார்வையாளன் வேறு, தான் வேறு என இரண்டற்று ஒன்றாக்கும் பொதுமைவாதி. திருநாள் மங்கலம் இனிதே நிறைவுற்றது.

இரண்டாம் நாள் காலை அமர்வில் மங்கல விளக்கேற்றல். திரு. க. அருள் நேசன், திரு.ச. சிவகுமார், இரு வர்த்தகப் பிரமுகர்களும் ஏற்றி வைத்தனர். கண்கள் பஞ்சடைந்தவனுக்குக் கர்ணன் வீட்டுக்கு வழி சொன்னவனைப் போல கடவுள் வாழ்த்தைச் செல்வி. தரங்கினி பாலமுருகன் இசைத்தார். இவர் இசைப் பரம்பரையில் பிறந்தவர். இசைக்கு உருவமில்லை. ஆனால் உருவமில்லாத சங்கீதத்திற்கு உருவம் ஒன்று இருப்பதை அப்போது உணர்ந்தேன்.

தலைமையுரையினைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்தினார். இவரின் உரை அறிவும் உத்தியும் சரிக்குச் சரி வாய்க்கப் பெற்ற அற்புதமான அர்த்தநாரீஸ்வரர்போல்அமைந்தது.

தொடக்கவுரையை சி.தவராசா நிகழ்த்தினார். மக்கள் சிந்தனையை மழுங்கடிக்காமல் தன்னோடு சேர்ந்து எந்த அவையையும் சிந்திக்கச் செய்யும் சிந்தனை உரையாக அமைந்தது.

**நயினை.கி.கிருபானந்தா**
**பொருளாளர்,**
**யாழ்ப்பாண கம்பன்கழகம்.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்கு யார் பொறுப்பு?

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

காலையில் நீராடி ஆலயத்திற்குச் செல்லலாம் என்று வீட்டை விட்டு வெளியேறிய போது தெருக்கோடியில் மூட்டைகள் பல காணப்பட்டன. அவை யாரோ வெளியிடத்தவர் இரவுநேரங்களில் கொண்டுவந்து போட்டது என என்னால் உணரமுடிந்தது. தொடர்ந்து செல்லும் போது தெருநாய்கள் சில சொப்பிங் பாக் மூட்டைகளை இழுத்து சண்டை போட்டுக் கொண்டிருந்தன. அவை தமது உணவிற்காக (அதனை) வீதியில் கிழித்துப் போட்டு சண்டையிட்டவண்ணம் இருந்தன. ஆலயத்தில் இறைவனை அமைதியாகத் தரிசிக்க சென்றபோதும் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்களின் புலம்பல் எனது காதுகளிற்கு எட்டியது. ஆலயச் சூழலிலும் பலர் அசைவ உணவுக் கழிவுகளை வீசிவிட்டு செல்கின்றனர் என அதனை உறுதிப்படுத்துமாப் போல் ஆலய வீதியில் துர்நாற்றம் வீசிய வண்ணம் இருந்தது.

வீடு திரும்பிப் பத்திரிகையைப் பார்த்த போது காக்கைதீவுப் பகுதியில் வைத்திய சாலைக் கழிவுகள் வீசப்பட்டு அது தொடர்பாக விசாரணை இடம்பெறுவதான செய்தி. தொலைக்காட்சியில் வானிலை மாற்றம் செய்தியுடன் யாழ் வளிமண்டலம் மாசுக்களால் நிறைந்துள்ளது. மாசு சுட்டெண் அதிகரித்திருப்பதால் சுவாசச் சிக்கல் உள்ளவர்கள் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது அண்மைக் காலங்களாக எமது சூழலில் எல்லோராலும் அவதானிக்கப் படக்கூடிய விடயங்களாகவே காணப் படுகின்றது. எனினும் ஏன் இவை அவதானிக்கப்படுகின்றது அல்லது பேசு பொருளாகின்றது என பார்த்தால் அண்மைக் காலங்களில் உலகளாவிய ரீதியிலும் மற்றும் எமது நாட்டிலும் மாபெரும் இயற்கை அனர்த்தங்கள் இடம்பெற்றிருக்கின்றன. குப்பை மேடு சரிவு, வெள்ள அபாயம், வெள்ளத்தினால் விவசாய நிலங்கள் பாதிப்பு, வைத்திய சாலைகளில் தொற்றுநோய்ப் பெருக்கம் இவை மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இதனாலேயே இந்த அவதானிப்புகள் மக்களால் கண்டறியப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க இவ் இயற்கை அனர்த்தங்களிற்கு மூலகாரணம் 2017 இற்கு முன்னமே ஐக்கிய நாடுகள் சபையின் ஆராய்ச்சிக்குழுவால் கண்டறியப்பட்டு விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் முன்மொழிவு பூமி வெப்பமாதலினாலேயே இவ்வாறான அனர்த்தங்கள் இடம்பெறுகின்றன. இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை எனவும் கூறியதோடு பூமி வெப்பமாதலுக்கு பற்பல காரணிகள் காரணமாக இருந்தாலும் சனத்தொகைப் பெருக்கமானது இவ்விளைவுகளை மென்மேலும் அதிகரிக்கச்செய்யும் எனவும் தீர்மானித்தது. அதற்கான பல முன்மொழிவுகளை முன்வைத்தனர்.

இவற்றில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (scestanabel development goal) SDG என 17 முன்மொழிவுகளை முன்வைத்தனர். இவை சூழலியல் சீர்திருத்தத்தால் மாற்றியமைக்க முடியாது எனவும் இவை சூழலியல், பொருளாதார, சமூகவியல் மாற்றங்களில் முற்பாதுகாப்பு நடவடிக்கையாக ஒட்டுமொத்தமாக 17 இலக்குகள் 15 வருட கால எல்லைக்குள் அடையப்பட வேண்டும் எனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2030ஆம் ஆண்டு அதன் இறுதி இலக்கை நோக்கி அங்கத்துவ நாடுகள் முன்நகர்கின்றன. இவற்றுள் இலங்கை இப் 17 இலக்கினையும் எந்தவித சீர்திருத்தமுமின்றி ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இவ் இலக்குகளில் பிரதானமாக முடிவடையும் வளங்களை மீள்சூழற்சி செய்து வருங்கால சந்ததிக்காக சேமித்தல், உலக வெப்பமாதலுக்கு உந்துசக்தியாக இருக்கும், மற்றும் சூழலை அசுத்தமாக்கும் பிரதான காரணிகளான மாசுக்களை கட்டுப்படுத்தல் உணவு பாதுகாப்பு போன்றன முக்கிய இடம் வகிக்கின்றன. இங்கு மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை செலுத்தும் காரணியாக மாசுக்களை கட்டுப்படுத்தல் மற்றும் மீள்சுழற்சி செய்தல் முக்கியமான விடயமாகும்.இலங்கையைப் பொறுத்தவரை இவ் 17 இலக்குகளுமே சவாலாக உள்ள நிலையில் இங்கு மாசு முகாமைத்துவத்தில் இலங்கை எதிர்கொள்ளும் சவால் பற்றியே நாம் நோக்க இருக்கிறோம்.

"Clean SriLanka" இந்த அரசின் தாரக மந்திரம். இதற்கு முன் உள்ள அரசுகளும் மாசு முகாமைத்துவத்திற்காக பல மில்லியன் கணக்கில் செலவிட்டு தோல்வியையே கண்டன. இலங்கையில் பாரிய குப்பைமேடு சரிவு அனர்த்தம், குப்பை மேட்டின் காரணமாக கட்டு நாயக்கா விமான நிலையம் ஸ்தம்பிதம், கப்பல் விபத்து, நீர்கொழும்பு கடல்பகுதி மாசுக்களால் பாரிய ஆபத்து என பற்பல செய்திகள் ஊடகங்கள் வாயிலாக கேள்வியுற்ற போதும் பத்தில் ஒன்றாக கேட்டு நாம் அனைவரும் அடுத்த வேலையைப் பார்க்க செல்கிறோம்.

இவ்விடயம் ஏன் முக்கியமானது? இவற்றால் என்ன நடக்கப் போகிறது? இது என்னுடைய வேலை இல்லை! இவைகளே எமது இவ்வாறான எண்ணத்திற்கு காரணம். மாசுக்கள் முதலில் யாரால் உருவாக்கப்படுகிறது என்று பார்த்தால் மனித பெருக்கத்தால் அவனது தேவைகள் அதிகரிக்கின்றது. அதனைப் பூர்த்தி செய்ய உற்பத்தி அதிகரிக்கவேண்டும். மேலும் வாழ்க்கையினை இலகுவாக்க ஆடம்பரத்தை தேடி, பொழுதுபோக்கு என இயற்கையை பற்றி அக்கறை இன்றி தனது சுயநலத்திற்காக இயற்கை வளங்களை மட்டுப்பாடு இன்றி பயன்படுத்துவதுடன் செயற்கையாக பலவற்றை உருவாக்கி அதனையும் வினைத்திறனுடன் பயன்படுத்தாது விரையமாக்குகிறார்கள். இவையே மாசுக்களாக மீண்டும் சூழலில் விட்டெறியப்படுகின்றன.



இவ்வாறான வளங்கள்இயற்கையில் முடிவடையும் நிலையை எய்துகின்றன. எமது வருங்கால சந்ததிக்கு மிச்சமின்றி நாம் அதனை வீண் விரயமாக்குகின்றோம். அதுமட்டுமன்றி நமது அறிவியல் தொழில்நுட்பம் என்று சொல்லி மேலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி அவற்றை இச்சூழலிலே விட்டெறிகின்றோம். இதில் பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன ஒருகாலத்தில் புதிய கண்டுபிடிப்பு என போற்றப்பட்டது. இன்று எம்மால் தவிர்க்க முடியாத ஒரு பொருளாக பாவனையில் உள்ளது. ஆனால் அதன் கழிவுகள் இன்று உலகிற்கே பெரிய சவாலாக உள்ளன. இயற்கையை சீர்குலைப்பதில் முக்கியமான ஒரு காரணியாக காணப் படுகிறது. எமது இவ் இயற்கை கால நிலை மாறுபாட்டிற்கும் இவ்வாறான நீர், நிலம், காற்று என்பனவற்றில் எம்மால் விட்டெறியப்படும் மாசுக்களே பிரதானமான காரணியாக காணப்படுகிறது.

அப்படியானால் இதனை கட்டப்படுத்துவது, அகற்றுவது யார் பொறுப்பு? எனும் கேள்வி எம்மில் எழுகின்றது. இம் மாசுக்கள் உருவாக்கத்தை தவிர்ப்பது, கட்டுப்படுத்துவது உலகளாவிய ரீதியில் பெரும் சவாலாக இருந்தாலும் பல நாடுகள் முன்னுதாரணமாக செயற்படுகின்றன. எமது நாடும் அவ் உடன்படிக்கைக்கு வந்தாலும் வெறும் காகிதத்திலேயே அது காணப்படுகின்றது.

இது எவ்வாறிருந்தாலும் உருவாகும் மாசுக்களையாவது சரியான முறையில் முகாமைத்துவம் செய்தால் அவற்றால் சூழல் பாதிப்பை கணிசமான அளவு கட்டுப்படுத்த முடியும். இதற்கு சிங்கப்பூர், ஜப்பான் என்பன நல்ல முன்னுதாரணங் களாகும் அப்படியானால் எமது நாட்டில் அது சாத்தியமில்லையா என்றால் எமது பதில் அரசாங்கம் சரியில்லை, மாநகரசபை சரியில்லை, பிரதேசசபை சரியில்லை என்பதும், துப்பரவுப் பணியாளர்கள் பொறுப்பற்றவர்கள், கண்காணிப்பாளர்கள் சிரத்தையுடன் வேலை செய்வதில்லை என்பதும் தான் எமது பதிலாக இருக்கும்.

சிங்கப்பூரில் திண்ம மாசுக்கள் 95% மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. இவை வகைபிரிக்கப்பட்டு சேகரிக்கப்படுவதால் திறம்பட முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இது அந்த நாட்டை அசுத்தத்தில் இருந்து அழகாக உருவாக்குவதில் மட்டுமல்லாது இயற்கைக்கு மாசு வெளியேறாமலும் பாதுகாக்கின்றது. சேதனக் கழிவுகள் பசளைகளாகவும், பிளாஸ்ரிக்கள் வீதித் திருத்தத்திற்கான பாவனைப் பொருளாகவும், ஏனைய மூலப்பொருட்கள் மீள்சுழற்சிக்கும் செல்வதுடன் பயன்படுத்த முடியாத 5% மாசு எரித்து மின்சாரம் பிறப்பிக்க மூலப்பொருளாகவும் பயன்படுத்தப்பட்டு இயற்கைக்குப் பாதிப்பற்ற வாயுவாக வெளியேற்றப்படுகின்றது.

இதே போன்று ஜப்பானில் திண்மக் கழிவுகள் 8 வகையாகப் பிரிக்கப்பட்டு சேமிக்கப்படுகிறது. இதில் அந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் தன் நாடு சுத்தமாக மாசற்று இருக்க வேண்டும் என்று பொறுப்புடன் நடந்து கொள்வதால் இச்செயற்றிட்டம் இலகுவாக இருக்கிறது. இவைகளை முன்னுதாரணமாக கொண்டு வெளிநாடுகளின் நிதியுதவியுடன் எமது நாட்டிலும் பல பயிற்சிகள் மற்றும் செயற்றிட்டங்கள் பல மில்லியன் செலவில் நடைமுறைப் படுத்தப்பட்டன. உண்மையில் இலங்கையைப் பொறுத்த வரை எல்லா செயற்றிட்டங்களும் பணத்தை செலவிடும் நோக்கில் செயற்படுத்தப்பட்டு பின் அவற்றின் மீள் அவதானிப்பு, குறைநிரப்பு செயற்றிட்டம் இன்றி அனைத்தும் தோல்வியையே தழுவுகின்றது. இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் அக்கறையுடன் செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.

இவ்வேளை எனக்கு சிறுவயதில் ஒரு முதியவரின் உபதேசம் ஞாபகம் வருகிறது. "மாற்றம் என்பது என்னிடமிருந்தே ஆரம்பிக்க வேண்டும்" அதை நான் பிறரிடம் எதிர்பார்ப்பது எனது தவறு. யாழ்ப்பாண நிலவரப்படி பாரியளவிலான தொழிற்சாலைக் கழிவுகள் இல்லை என்றே சொல்லுமளவிற்கு காணப்படுகிறது. எனின் வீட்டுக் கழிவுகள், வியாபார நிலையக் கழிவுகளே பெரும்பாலும் காணப் படுகின்றன. மாநகரசபை, பிரதேசசபை தகவல்படி இக் கழிவுகளில் சேதனக்கழிவு (உக்கக்கூடிய கழிவு) 70% காணப்படுகிறது.இவை தற்சமயம் தொழில்நுட்ப உதவியுடன் இயற்கை உரத் தயாரிப்பிற்கு பயன்படுத்த முடியும். அதற்கான தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன. பிளாஸ்ரிக், பொலித்தீன் 20%, மிகுதி கடதாசிப் பொருட்கள், உலோக இலத்திரனியல் கழிவுகள். இவை உரிய முறையில் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டால் ஓர் உறுதியான திண்ம மாசு முகாமைத்துவத்தினை எட்ட முடியும். பிளாஸ்ரிக், பொலித்தீன் மற்றும் உலோகம், கண்ணாடி, கடதாசி என்பனவற்றை நாம் உரிய முறையில் சேகரித்தால் மீள் சுழற்சிக்கு பயன்படுத்தலாம். ஆனால் பெரிய சவாலாக இருப்பது அவற்றை எப்படிப் பிரித்து சேகரிப்பது என்பதிலேதான் உள்ளது. இங்கு மீண்டும் இதற்கு யார் பொறுப்பு என்பதே எம்மத்தியில் உள்ளது. இதற்கு நாமே பொறுப்பு என எவரும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம். அதற்கு பல சாட்டுப்போக்குகளை சொல்லி மற்றவர்களிலேயே குறை கண்டுபிடிக்கின்றோம். இதற்காக மாநகரசபை, பிரதேச சபைகள் பற்பல முயற்சிகள் எடுத்தும் தோல்விகளையே கண்டுள்ளன. உதாரணமாக யாழ் மாநகர சபை சுழற்சி முறை சேகரிப்பை அறிமுகப்படுத்தி உள்ளது. அதனை ஒழுங்கு பார்க்க அதிகாரிகளை நியமித்துள்ளது. அட்டவணை இட்டு குடியிருப்புகளுக்கு வழங்கியுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக சேகரிப்பு நிலையங்களை உருவாக்கி தவறவிட்டவர்கள் கழிவுகளைக் கொண்டு சென்று வழங்கக்கூடிய வசதியை உருவாக்கியுள்ளது. இற்கும் மேலதிகமாக தண்டப் பணம் அறவிடும் பொறிமுறையும் உள்ளது. இருப்பினும் இச் செயற்றிட்டம் பல பில்லியன்களை கரைக்கும் செயற்றிட்டமாகவே காணப்படுகின்றது. அப்படியானால் இங்கு யார் பிழை விடுகிறார்கள்? அது யாருடைய பொறுப்பு?

இவை எமது கூட்டுப் பொறுப்பு சமூகப் பொறுப்பு என்பதை நாம் மறந்து விடுகிறோம். உயர் அதிகாரி முதல் அடிமட்ட தொழிலாளிவரை மேல் மட்ட குடிமகன் முதல், குடிசை குடிமக்கள் வரை, பெரியவர் முதல் சிறியவர் வரை இவற்றிற்கு நாம் அனைவருமே பொறுப்பு. நாம் அனைவருமே தவறு விடுகிறோம் என்று ஏற்றுக் கொள்ளும் வரை இம்மாற்றம் ஒரு எட்டாக்கனியாகவே காணப்படும். எமது நாட்டை சிங்கப்பூர் போல் மாற்றுவோம் என்பது மேடைப்பேச்சிலும், காகிதத்திலும் மட்டுமே காணப்படும்.

இங்கு திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றியே கதைத்துள்ளோம். இது மட்டுமல்லாது வட பிராந்தியத்திலுள்ள நாம் வருங்காலத்தில் தூய குடிநீர் பெறுவதிலும், தூய உணவு பெறுவதிலும் பல சவாலை எதிர்கொள்ள இருக்கிறோம். இப்பொழுதே இது குறித்து அவதானம் எடுக்க வேண்டியது இப்பிரதேச குடிகளாகிய ஒவ்வொருவருடையதும் தலையாய கடமையாகும்.இக் கட்டுரையை வாசிக்கும் ஒவ்வொரு தனிநபருக்கும் இது எனது சமூகப்பொறுப்பு என்ற எண்ணம் உருவாகுமாயின் மாற்றம் வெகு தொலைவில் இல்லை.

பொ. தை. ய. யசோதன்
பதவி நிலை தொழில்நுட்ப அலுவலர்,
தாவரவியில் துறை,
விஞ்ஞான பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 729





நீ பழுவூர் இளையராணி நந்தினியைப் பார்த்து அசூயைப்படவில்லை. அவள் தான் உன்னைப் பார்த்துப் பொறாமைப்பட்டாள். அவள் தான் உன்னை வெறுத்தாள்.

"தம்பி! இலங்கையில் பைத்தியக்காரியைப்போல் திரியும் நம் பெரியம்மாவை நினைத்து நீ நெஞ்சம் குமுறுவதாகச் சொன்னாய். அரண்மனையில் சகல சுக போகங்களுடன் வாழ்ந்திருக்க வேண்டிய நந்தினி எப்படியெல்லாம் வாழ்க்கையில் கஷ்டப்பட்டாள் என்பதை நினைக்கும்போது என் இதயம் பிளந்து போகும் போலிருக்கிறது. யாரோ, எப்பொழுதோ செய்த தவறுகளின் காரணமாக, எனக்கு முன் பிறந்த தமக்கை இந்தக் கிழவர் பழுவேட்டரையரை மணக்க நேர்ந்து விட்டது."

"அக்கா! இதெல்லாம் எப்படி நேர்ந்திருக்கும் என்று உனக்கு ஏதாவது தெரிகிறதா? நம் பெரியம்மா இறந்து விட்டதாகத் தந்தை எண்ணுவதற்குக் காரணம் என்ன? நந்தினி அநாதையைப் போல எங்கேயோ, யார் வீட்டிலோ வளர்ந்து, இந்த நிலைமைக்கு வருவதற்குக் காரணம் என்ன.?"

"அதைப்பற்றியெல்லாம் நான் இரவும், பகலும் யோசித்து வருகிறேன். ஆனால் இன்னமும் நிச்சயமாய்க் கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த இரகசியங்களை அறிந்தவர்கள் இப்போது இரண்டு பேர் நமக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்.

நம்முடைய பாட்டி செம்பியன்மாதேவிக்கு ஏதோ விடயம் தெரிந்திருக்கிறது. முதல் மந்திரி அநிருத்தருக்கு எல்லா விடயமும் தெரிந்திருக்கும் எனத் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் இரண்டு பேரிடமிருந்தும் நாம் எதுவும் தெரிந்து கொள்ள முடியாது. அநிருத்தருடைய சீடன் ஆழ்வார்க்கடியானுக்கும் ஓரளவேனும் தெரிந்திருக்க வேண்டும். அவன் குருவை மிஞ்சியவன்! வாயைத் திறக்கமாட்டான். தம்பி! அதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு இப்போது அவசரமும் இல்லை. நந்தினியினால் நம் குலத்துக்கு விபரீதமான அபாயமும், அபகீர்த்தியும் ஏற்படாமல் தடுப்பது தான் இப்போது முக்கியம். வந்தியத்தேவர் சொன்னார், 'பழுவூர் ராணி மீன் சின்னம் பொறித்த, மின்னலைப்போல் ஒளிரும் வாள் ஒன்றை வைத்துப் பூஜை செய்து கொண்டிருக்கிறாள்' என்று. அதைக் கேட்டதிலிருந்து என் நெஞ்சு பதைத்துக் கொண்டேயிருக்கிறது. தான் பிறந்த குலம் சோழ குலம் என்பதை அறியாமல் பழுவூர்ராணி ஏதாவது செய்துவிடப் போகிறாளோ என்று கவலையாயிருக்கிறது."

"பழுவூர் ராணியிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டால் என்ன?"

"சொன்னாலும் என்ன பயன் ஏற்படுமோ, தெரியாது. நம்மிடமெல்லாம் அவளுடைய கோபம் அதிகமானாலும் ஆகும். ஆனால் நமது கடமையை நாம் செய்து விட வேண்டியது தான்!"

"அதற்காக வந்தியத்தேவரை நீ அனுப்பியிருப்பது சரி தான். ஆனால் தந்தையிடமும் தெரிவிக்க வேண்டாமா? அவர் எதற்காக உடல் வேதனை போதாதென்று, மனவேதனையும் பட்டுக் கொண்டிருக்க வேண்டும்? நாம் உடனே, தஞ்சைக்குப் புறப்படலாம் அல்லவா?"

"கூடவே கூடாது, தம்பி! இரண்டு நாளில் தஞ்சைக்கு நான் புறப்படுகிறேன். ஆனால் இந்தச் சூடாமணி விஹாரத்தில்தான் நீ இன்னும் சில காலம் இருக்கவேண்டும்."

(தொடரும்...)




# சிறுவர் அரங்கம்

## எதிரியால் ஏற்பட்ட விளைவு

ஒரு காட்டுக்கு நடுவில் ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றங்கரையில் ஒரு மரத்தில் ஒரு கொக்கு தன் மனைவியுடன் வசித்து வந்தது.

ஒவ்வொரு முறையும் பெண் கொக்கு கூடு கட்டி முட்டைகளை இடும் போதெல்லாம் ஒரு பெரிய கருநாகம் அவற்றை உண்டு சென்றது.

கொக்கும் அதன் மனைவியும் மிகவும் துயருற்று இருந்தன. கொக்குக்கு ஒரு நண்டு நண்பனாக இருந்தது.



ஒரு நாள் கொக்கு நண்பனிடம் சென்று தன் பிரச்சினையைத் துயரத்துடன் கூறியது.

"அந்தப் பொல்லாத திருடன் அடிக்கடி எங்கள் முட்டைகளைத் தின்று விடுகிறான். இதைத் தடுப்பதற்கு எனக்கு ஒரு வழியும் தெரியவில்லையே என்று வருத்தத்துடன் நண்டிடம் முறையிட்டது. கவலைப்படாதே, என்று நண்டு அதை ஆறுதல்படுத்தி, பிறகு கூறியது: "என்னைப் போல் ஒரு நண்பன் இருக்கும்போது வருந்த வேண்டாம். யோசித்து நாம் ஒரு தீர்வைக் கண்டுபிடிப்போம்."

கொக்கின் அருகில் உட்கார்ந்து நண்டு யோசனை செய்தது. திடீரென்று துள்ளிக் குதித்து, "நண்பனே ! ஓர் அருமையான திட்டம் தோன்றி இருக்கிறது," என்ற நண்டு கொக்கின் காதில் தன் திட்டத்தைக் கூறியது.

அதைக் கேட்டு மகிழ்ந்த கொக்கு உடனே தன் கூட்டிற்குப் பறந்து சென்றது. தன் மனைவியிடம் நண்டின் திட்டத்தை விவரித்தது.

அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் அது மிகவும் துடிப்பாக இருந்தது. "நீ கூறுவதைப் போல் இதை நிறைவேற்ற முடியுமா?" என்று அதன் மனைவி கேட்டது.

"நாம் செய்வதில் ஏதாவது தவறாக நிகழ்ந்து விடுமோ ? மீண்டும் நன்றாக யோசித்துப் பிறகு திட்டத்தைச் செயற்படுத்து," என்று எச்சரித்த மனைவியின் சொற்களை அலட்சியப்படுத்தியது அந்தக் கொக்கு. திட்டத்தை விரைவாகச் செயற்படுத்துவதில் அது ஆவலாக இருந்தது.

கொக்கு ஆற்றங்கரைக்குச் சென்றது. மீன் பிடிக்கத் தொடங்கியது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமான பாதைகள்தான் – அழகான இடங்களுக்கு அழைத்துச் செல்லுகிறது...

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நமக்கு நாமே பகை நமக்கு நாமே கேடு

எம் தமிழ் மக்களின் நிலைமையை நினைத்தால் கட்டாந்தரையில் நின்று கத்திக் கதற வேண்டும் போல் இருக்கும்.

அந்தளவுக்கு எங்கள் இனத்தை வைத்துப் பிழைப்பு நடத்துகின்ற ஈனர்களின் தொல்லை போதுமென்றாகிவிட்டது.

அரசியல் தொடக்கம் வறுமைப்பட்ட மக்களுக்கு உதவி செய்தல் என்று வெளிக்கிட்டவர்கள் வரையில், எங்கும் ஊழலும் ஊதாரித்தனமும் எழுந்து நின்று சன்னதம் ஆடுகின்றன.

உண்மை. எங்கள் அரசியலைப் பொறுத்தவரை யாரை நம்புவதென்றே தெரியாமல் உள்ளது.

அந்தளவுக்கு மிகப் பயங்கரமானவர்கள் நம் அரசியலுக்குள் ஊடுருவி விட்டனர்.

அதிலும் புலம்பெயர் உறவுகளின் உதவிகளைப் பெறுவதற்கு அரசியல் ஒரு தக்க வியாபாரமாகிவிட்டது.

தவிர, தமிழ் மக்களுக்கு விசுவாசமாகச் செயற்படக்கூடிய அரசியல்வாதிகள் யார் என்று இனம் காண்பதும் முடியாத காரியமாகவுள்ளது.

இந்நிலையில் வறுமைப்பட்ட மக்களை வைத்து நடக்கின்ற வியாபாரம் சொல்லிமாளா.

ஆம், வறுமைப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதாகக்கூறி, புலம்பெயர் உறவுகளிடம் உதவிகளைப் பெற்று அதில் பெரும்பகுதியை தாம் கொள்ளையடித்து விட்டு வறுமைப்பட்ட மக்களுக்குக் கிள்ளித் தெளிக்கின்ற கொடுமையை என் சொல்வது,

இதற்கும் மேலாக, ஏழைக் குடும்பங்களை ஏளனப்படுத்துவது, அவர்களை அவமானப்படுத்தும் வகையில் கதைப்பது, அவற்றை இணையத்தளங்களில் காட்சிப்படுத்துவது என்ற அரக்கத்தனத்தைப் பார்க்கும்போது, எங்கள் தமிழ் மக்கள் இத்துணை பாவம் செய்தவர்களா? என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு சொல்லில் வடிக்க முடியாத அளவில் நீரோசை நடந்து கொண்டிருக்கிறது.

இவைதான் என்றால் இல்லை. எங்களை நாங்களே வசையடித்து தூற்றுகிறோம். சேற்றை வாரி இறைக்கிறோம். தனிநபர் கௌரவத்தையோ, குடும்ப கௌரவத்தையோ எவரும் நினைத்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை.

யார் வேண்டுமானாலும் எப்படியும் விமர்சிக்கலாம் என்ற மிக மோசமான நிலைமை நம் மண்ணில் தாண்டவமாடுகிறது.

இதற்குப் புலம்பெயர் உறவுகளில் ஒரு தரப்பினர் ஊக்கம் கொடுக்கின்றனர். உதவியும் செய்கின்றனர் என்பதுதான் வேதனையிலும் வேதனை.

இப்படியே நிலைமை நகருமாயின், எங்கள் தமிழினத்தின் எதிர்காலம் என்பது படுபாதாளத்தில் வீழ்ந்து போகுமேயன்றி, நம் இனத்துக்கு எழுச்சியும் உயர்ச்சியும் சாத்தியம் இல்லை என்றாகிவிடும்.

எனவே நம் தமிழ் இனத்துக்கு நாமே பகையாகவும் நாமே கேடாகவும் இருக்கின்றோம்.

ஆக, இந்த நிலைமை மாற வேண்டும். மாற்ற வேண்டும். இதைச் செய்யாமல் எம் இனத்தின் உரிமை பற்றிப் பேசுவது வெறும் வாய்ச்சாடலேயன்றி வேறில்லை.

# அநுர அரசு பெறும் கடன்கள் தொடர்பில் விவாதம் அவசியம்

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கத்தினால் பெறப்படுகின்ற கடன்கள் தொடர்பிலும் பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தொடர்பான நேற்றைய குழுநிலை விவாதத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் பாதீட்டை முன்வைக்கும் போது எந்தளவு தொகை கடன் பெறப்பட வேண்டும் என்பதனை மாத்திரமே கூறுகின்றது.

ஆகவே கடன் தொடர்பில் பாராளுமன்றில் முறையான விவாதம் நடத்தப்பட்டு, அந்தக் கடன் அளவை எவ்வாறு குறைக்க முடியும் என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

கடன் ஸ்திரநிலை ஆய்வினை மாற்றுவதாக அரசாங்கம் ஆரம்பத்தில் கூறியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படவில்லை.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை அவ்வாறே கொண்டு செல்வதற்குச் சர்வதேச நாணய நிதியத்துடனான சில நிமிடக் கலந்துரையாடலிலேயே அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

அதில் எந்தவித மாற்றத்தையும் தற்போதைய அரசாங்கம் ஏற்படுத்தவில்லை.

எனவே முடியுமானால் சர்வதேச பிணை பத்திர உரிமையாளர்களுடனான உடன்படிக்கையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது இலங்கையில் உள்ள உழைக்கும் சாதாரண மக்களே அதிகளவில் பாதிப்படைகின்றனர்.

எவ்வாறாயினும் தற்போதைய அரசாங்கம் அந்த விடயம் தொடர்பில் எந்தக் கருத்துக்களையும் முன்வைப்பதில்லை. இதன்படி செலவினங்கள் தொடர்பில் அதிகளவில் பாராளுமன்றில் கருத்தாடல்கள் இடம்பெற்றுள்ளன.

வரவுகள் குறித்து கருத்துக்கள் முன்வைக்கப்படுவதில்லை. பெறப்படவுள்ள கடன்கள் தொடர்பில் கருத்துரைக்கப்படுவதில்லை.

எனவே அவ்வாறான கடன்கள் தொடர்பில் தொழில்நுட்ப ரீதியாகவும் ஆய்வு ரீதியாகவும் விவாதிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (ம-7)

# வாய்ப் புற்றுநோயால் தினமும் மூவர் உயிரிழப்பு!

## வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க தகவல்

(கொழும்பு)

நாட்டில் வாய்ப்புற்று நோய் காரணமாக நாளொன்றுக்கு மூன்று பேர் உயிரிழக்கின்றனர் என வைத்தியர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, நாட்டில் வருடாந்தம் மூவாயிரம் வாய்ப்புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

புகையிலை பாவனை மற்றும் புகையிலையை பயன்படுத்தி தயாரிக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்துவதாலும் வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதாக வைத்திய பரிசோதனைகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-8)

# படையினரைக் கைது செய்யும் அரசின் முடிவு நியாயமற்றது

## நாமல் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடியவர்களை கைது செய்ய அரசாங்கம் எடுத்த முடிவு நியாயமற்றது என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடிய அனைவரையும் பாதாள உலகத்துடன் தொடர்புகள் இருப்பதாகக் கருதி அவர்களை ஒட்டுமொத்தமாகக் கைது செய்வது நியாயமானதல்ல.

அத்தோடு பாதுகாப்புப் படைகளில் சிலர் தவறான செயல்களைச் செய்யலாம் என்றும் அத்தகைய நபர்களுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

எனினும் பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடியவர்கள் குறித்து அரசாங்கம் ஒரு பரந்த கலந்துரையாடலை நடத்த வேண்டும் என்றும், அவர்களுக்கு சட்டபூர்வமாக பணிநீக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதன்படி அத்தகைய நபர்கள் மீது அரசாங்கம் ஒரு கண்காணிப்பு செயல்முறையை உருவாக்க முடியும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## மகளிர் தினமும் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழிசைக் கவித்தடாகம் நடத்தும் மகளிர் தின நிகழ்வும் கௌரவிப்பும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழிசைக் கவித்தடாக பெண்ணின் குரல் மகளிர் அமைப்பின் நிறுவுநர் உடுவிலூர் கலா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வலிதெற்கு பிரதேச செயலாளர் அ.பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

## ஹர்ஷ டி சில்வா - பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் வாய்த்தர்க்கம்

(கொழும்பு)

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா மற்றும் சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் நேற்று பாராளுமன்றத்தில் பொது நிதிக் குழுவின் விவகாரங்கள் தொடர்பில் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய, பொது நிதிக் குழுவின் தலைவரான கலாநிதி டி சில்வா, குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு திட்டத்தையும் ஆய்வு செய்ய போதுமான நேரம் வழங்கப்படாவிட்டால் நிராகரிக்க முடியும் என்றார்.

"நான் பொது நிதிக் குழுவின்தலைவர், எனவே நான் அதை நிராகரிக்க முடியும்," என்றுடி சில்வா கூறினார்.

இதற்குப் பதிலளித்த சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க, கலாநிதி டி சில்வா அச்சுறுத்தல்களை விடுத்ததாகக் குற்றம் சாட்டினார்.

"அரசாங்க உறுப்பினரோ அல்லது எதிர்க்கட்சி உறுப்பினரோ அச்சுறுத்தும் தொனியில் பேச முடியாது," என்று அவர் கூறினார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID
## PUTHUKKUDIYIRUPPU PRADESHYA SABHA

1. The **Chairman**,Local Authority Procurement Committee and The **Chairman**, Divisional ProcurementCommittee on behalf of the Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road,Puthukkudiyiruppu invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned intable below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 21.03.2025 until 02.04.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 28.03.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 02.30 P.M on 03.04.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | NP/14/44(04)/Coun/Works/01/2025 | Renovation of Thurkkai Amman Kovil Road and Repairing Work of Paandiyan Road | Council Fund | 3.81 | 77 | C9 & C8 (Highway) | 3,000.00 | 21-May-2025 | 60,000.00 | 18-Jun-2025 |
| 02 | NP/14/44(04)/Coun/Works/02/2025 | Renovation of Udaiyarkaddu South 1st Cross Road, Maanikkapuram Amman Kovil Near Road (Tar Road) & Baarathy Vidyalajam's Near Amman Kovil Road | Council Fund | 5.93 | 77 | C8 & C7 (Highway) | 3,000.00 | 18-Jun-2025 | 90,000.00 | 16-Jul-2025 |
| 03 | NP/14/44(04)/Coun/Works/03/2025 | Renovation of Mupperunthevi Kovil (Pre-School) Road, Suthanthirapuam School's Right Side Road, Vivekanandha Pre School Road and Construction of Box Culvert at Udaiyarkaddu Ward Area , West Box | Council Fund | 5.08 | 77 | C8 & C7 (Highway) | 3,000.00 | 18-Jun-2025 | 80,000.00 | 16-Jul-2025 |
| | | Culvert Near the Nadanamiddaan Pillaiyar Temple | | | | | | | | |
| 04 | NP/14/44(04)/Coun/Works/04/2025 | Renovation of Venavil Amman Kovil Back Road and Puthukkudiyiruppu East Paatpannai Road | Council Fund | 3.39 | 77 | C9 & C8 (Highway) | 3,000.00 | 21-May-2025 | 50,000.00 | 18-Jun-2025 |
| 05 | PSDG/NP/MU/PTKPS/2025/LAR/03 | Construction of Malikavajal Road | PSDG | 4.24 | 77 | C8 & C7 (Highway) | 3,000.00 | 21-May-2025 | 60,000.00 | 18-Jun-2025 |
| 06 | PSDG/NP/MU/PTKPS/2025/LAR/04 | Construction of Pandarikkulam Road | PSDG | 3.39 | 77 | C9 & C8 (Highway) | 3,000.00 | 21-May-2025 | 50,000.00 | 18-Jun-2025 |
| 07 | PSDG/NP/MU/PTKPS/2025/LAR/05 | Construction of Mankulam Kudiyiruppu Road | PSDG | 4.24 | 77 | C8 & C7 (Highway) | 3,000.00 | 21-May-2025 | 60,000.00 | 18-Jun-2025 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:021 229 1023, email: pkips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the **Chairman, Local authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu and Bids (Original & Duplicate) S/No from 05 to 07** must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road,Puthukkudiyiruppu on or before 02.30 P.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu **commencing at 10.30 AM as stated in table above.**
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

**Chairman, Local Authority Procurement Committee & Divisional Procurement Committee,Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**

(C-2505) 21.03.2025

## ராஜஸ்தான் அணி கப்டனான ரியான் பட்டராக தொடரும் சஞ்சு சம்சன்



ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு ரியான் பராக் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். சஞ்சு சம்சன் காயம் காரணமாக 3 போட்டிகளில் விக்கெட் கீப்பிங்கில் விளையாடமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் பட்டராக அணியில் சஞ்சு சம்சன் தொடருவாரென அணியின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஜொஃப்ரா ஆர்ச்சர் வீசிய பந்தில் விரலில் காயம் ஏற்பட்டது. அதனால் விரலில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இந்த அறுவை சிகிச்சையினால் முதல் 3 போட்டிகளில் கீப்பிங், கப்டன் பொறுப்பிலிருந்து சம்சன் விலகுவதாகக் கூறப்பட்டுள்ளது. என்சிஏவில் உள்ள மருத்துவர்கள் விக்கெட் கீப்பிங்கில் இருந்து சஞ்சு சம்சனுக்கு சிறிது ஓய்வு தேவை என அறிவுறுத்தியுள்ளார்கள். இம்பாக்ட் பிளேயர் விதியின்படி பட்டராக மட்டுமே சம்சன் தொடர்வார் எனக் கூறப்பட்டுள்ளது. 23 வயதாகும் ரியான் பராக் தற்போது இளம் கப்டனாக இந்த ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கிறார். இதற்கு முன்பு விராட்கோலி 22 வயதில் ஆர்சிபி அணியைத் தலைமை ஏற்றது குறிப்பிடத்தக்கது.

ராஜஸ்தான் அணி தனது முதல் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை நாளை மறுதினம் எதிர் கொள்ளவிருக்கிறது. (6-8)

## இந்திய அணியை சீண்டும் இங்கிலாந்துவீரர் பென் டக்கெட்

ஐபிஎல் 2025 தொடர் முடிந்தவுடன் அடுத்த ஐசிசி டெஸ்ட் சம்பியன்சிப் சுழற்சியின் முதல் டெஸ்ட் தொடருக்காக இந்திய அணி, இங்கிலாந்து சென்று அந்த அணிக்கு எதிராக 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இது தொடர்பாக இங்கிலாந்தின் அதிரடி இடது கை தொடக்க வீரர் பென் டக்கெட் சில விடயங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் பென் டக்கெட் கூறியதாவது: இந்திய அணியை நாம் தோற்கடிக்க வேண்டும், இந்திய அணி பும்ராவின் பவுலிங்கைச் சுற்றியே உள்ளது. நான் அவரை 5 டெஸ்ட் தொடரில் இதற்கு முன் ஆடியுள்ளேன். அவர் எனக்காக என்ன வியூகம் வகுத்து இருப்பார் என்பதை நான் அறிவேன்.

என்னை பும்ரா ஆச்சரியத்திற்குள்ளாக்க முடியாது. மிகவும் சவாலாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவருடன் முகமது ஷமியும் அவரைப் போலவே அச்சுறுத்தல் தரும் பவுலர். புதிய பந்தில் வீசும் ஸ்பெல்லை எதிர்கொண்டு கடந்து விட்டால் அதன் பிறகு ரன்களைக் குவிக்கலாம். மேலும் குறித்த டெஸ்ட் நல்ல ஒரு தொடராக இருக்கும் என தெரிவித்தார். (6-8)

## யாழ்ப்பாணம் மாநகர சபை பகிரங்க ஏல விற்பனை

யாழ் மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கணக்கெடுப்பில் விற்பனை எனக்காட்டப்பட்ட பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை எதிர்வரும் 2025.04.05 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மாநகர சபை வளாகத்தில் நடைபெறவுள்ளது. பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் 2025.04.04 ஆம் திகதி அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் பங்குபற்ற விரும்பின் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 590.00 இனை 2025.04.05 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு முன்னர் செலுத்தி ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாயில்...

இருந்து 290 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இளைஞன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் குறித்த இளைஞனை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## 114 கட்சிகள்...

உள்ளூராட்சித் தேர்தலுக்காக 148 கட்சிகளும் 27 சுயேட்சை குழுக்களும் கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தன. அவர்களில் 136 கட்சிகளும் 23 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தன. அவற்றில் 114 கட்சிகள், 10 சுயேட்சைக் குழுக்களுடைய வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. 22 கட்சிகள், 13 சுயேட்சைக் குழுக்களுடைய வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன எனத் தெரிவித்தார். (ம-7,33)

## குருநகர்...

மீன்பிடித் துறைமுகத்திற்குச் சற்றுத் தொலைவில் படகொன்று தத்தளித்துக் கொண்டிருந்ததைக் கண்ணுற்ற தமிழக கடலோரக் காவல் படையினர் அவர்களை படகுடன் மீட்டுக் கரை சேர்த்தனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் அவர்கள் இருவரும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கடந்த 15ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற சமயம் படகு இயந்திரக் கோளாறு காரணமாகக் கடலில் தத்தளித்து வந்ததாகக் கூறியுள்ளனர்.

இருவரையும் கைது செய்துள்ள தமிழகப் பொலிஸார், இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இருவரும் கடத்தல் நோக்கத்துடன் தமிழகக் கடற்பரப்பினுள் நுழைந்தார்களா? எனும் சந்தேகத்துடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33)

## இறைவரி...

நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்புத் தொடர்பான விவாதம் நேற்று மாலை 5.00 மணி முதல் 5.40 மணி வரை இடம்பெற்றது.

விவாதத்துக்குப் பின்னர் எவ்வித திருத்தங்களுமின்றி சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (ம-7)

## வேட்புமனுக்கள்...

செய்திருந்தது.

இந்நிலையில் குறித்த வேட்புமனுக்கள் யாவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-7)

## யாழ்.செம்மணி...

(வயது-48) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணம் செம்மணி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது இ.போ.ச பஸ் வண்டியுடன் மோதுண்டு படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## மே 6...

336 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் நேற்று நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதன் பின்னரே தேர்தல் திகதி தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு 2023ஆம் ஆண்டில் வேட்புமனு கோரப்பட்ட போதிலும் கடந்த அரசு தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி வழங்கப்படாமையால் தேர்தலை ஒத்திவைக்க வேண்டியநிலை ஏற்பட்டிருந்தது.

ஆனால், இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய நிதி கிடைக்கப் பெற்றுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## 1,231 வேட்பாளர்...

தாக மாவட்ட அரச அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான பி.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை வேட்புமனுக்கள் ஏற்கும் பணிகள் நிறைவடைந்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்று நண்பகல் 12 மணியளவில் நிறைவுக்கு வந்திருந்தது.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடவுள்ள கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

இதுவரை நகரசபையாக இருந்து தரமுயர்த்தப்பட்ட வவுனியா மாநகர சபைக்கு முதலாவது தேர்தலாக இது அமைந்துள்ளது.

இம்முறை மாநகர சபையில் மொத்தமாக 20 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். அதற்காக 10 அரசியல் கட்சிகளும், 2 சுயேட்சைக்குழுக்களும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தன.

அவற்றில் மக்கள் போராட்ட முன்னணியின் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளர் ஒருவர் நிராகரிக்கப்பட்டுள்ளார். அதன்படி 11 தரப்புக்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்றார். (ம-7,250)

## யாழ்ப்பாண...

வேட்புமனுப் பத்திரம் ஏற்றுக் கொள்ளல் தொடர்பான ஊடக சந்திப்பு நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதிலிருந்து கருத்துத் தெரிவிக்கும்போதே யாழ்.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், உள்ளூராட்சித் தேர்தலில் யாழ்ப்பாண மாநகர சபைக்காக வேட்புமனுத் தாக்கல் செய்தோரில் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களும் ஞானப்பிரகாசம் சுலக்சன், நரேந்திரன் கௌசல்யா ஆகியோர் தலைமையிலான சுயேட்சைக் குழுக்களுடைய வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 5781
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 3 4 5 8 7 9
அத சம்பத
U 5 8 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 0356

தன நிதானய
திகதி - 2025.03.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1811
Q 12 49 76 78 Q
Double Chance 03083

மெகா பவர்
திகதி 20/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2129
W 05 21 39 58 64

ஜய JAYA
திகதி 2025.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 049
L 6 3 3 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4023
சீட்டிழுப்பு திகதி 20.03.2025
I 23 51 54 63
I

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.20
சீட்டிழுப்பு இலக்கம் 1090
மேடம் 14 22 29 54 மேடம்
51448 35

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.03.2025 வெற்றி வாரம் 489
Q 3 6 1 4 4 8
66812
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,905,891.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2755
சீட்டிழுப்பு திகதி 2025.03.20 தினம் வியாழக்கிழமை
05 15 25 52 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00

சனிதா
திகதி 20.03.2025 வெற்றி வாரம் 4916
08 43 57 77 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,585,744.00
86816

சசிரி
வெற்றி வாரம் 646
சீட்டிழுப்பு திகதி 20.03.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 28 30 43
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4467
சீட்டிழுப்பு திகதி 20.03.2025 தினம் வியாழக்கிழமை
31 35 51 59 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
212377

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Y 27 13 20 21 49
1931
20.03.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.569,133,446.20

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2581
சீட்டிழுப்பு திகதி : 2025.03.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,305,004.80
09 22 47 56 N
461402


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு...

நேற்று மாலை வேட்பு மனுக்கள் ஏற்கும் பணிகள் நிறைவடைந்த பின்னர் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்று நண்பகல் 12 மணியளவில் நிறைவுக்கு வந்திருந்தது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நான்கு உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடவுள்ள கட்சிகள் மற்றும் சுயாதீனகுழுக்கள் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக 10 கட்சிகளும் 2 சுயேட்சைக்குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்ததோடு புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக 7 கட்சிகளும் 3 சுயேட்சைக்குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

மேலும் துணுக்காய் பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக 6 கட்சிகளும் 2 சுயேட்சைக்குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்ததோடு, மாந்தை கிழக்கு பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக 6 கட்சிகளும் 2 சுயேட்சைக் குழுக்களும் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இதில் மொத்தமாக 38 அணிகள் வேட்புமனு தாக்கல் செய்ததுடன் 34 அணிகளின் வேட்புமனு ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளன.

4 அணிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள் ளன. இதில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் 2 சுயேட்சைக் குழுக்களினதும் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் போட்டியிடும் 2 அரசியல் கட்சிகளினதும் வேட்பு மனுக்களே நிராகரிக் கப்பட்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய பெரமுன கட்சி, ஸ்ரீலங்கா மகஜன பக்சய ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503
(3825)

## ஊடகவியலாளர் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்

### மாணவி கிரிஜா அருள்பிரகாசத்திற்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டுவரும் யாழ். பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப்பதக்கம் இவ் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இன்றைய அமர்வின் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையில் ஊடகவியலில் திறமைச் சித்தி பெற்ற மாணவியான மன்னார் மாவட்டத்தின் விடத்தல் தீவைச் சேர்ந்த கிரிஜா அருள் பிரகாசத்திற்கு வழங்கப்பட வுள்ளது.

கடந்த ஆண்டு இரத்தினபுரி மாவட்டத்தின் கொழும்புகாமம் என்னும் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணராஜா செல்வி இப் பதக்கத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## மிருசுவில் படுகொலையாளி சுனில் ரத்நாயக்கவிற்கு பயணத்தடை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் எட்டுத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட இராணுவ சிப்பாய் சுனில் ரத்நாயக்கவிற்கு உயர்நீதி மன்றம் நேற்று வெளிநாட்டு பயணத் தடைவிதித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை பூர்த்தியாகியுள்ள நிலையிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொதுமன்னிப்பிற்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவினால் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் மூன்று சிறுவர்கள் உட்பட 8 பேர் கொலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில் குற்றவாளியாக சுனில் ரத்நாயக்க 2015 ஆம் ஆண்டு அறிவிக்கப் பட்டார்.

இருப்பினும், 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

பொது மன்னிப்பு வழங்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணை நேற்று பூர்த்திசெய்யப்பட்டுள்ள நிலையில், தீர்ப்பு அறிவிக்கப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ம-7)

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!
உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :
தொலைபேசி:
076 097 3127
021 221 7603
/ - 076 636 3378
E.mail: Valampurii@yahoo.com

கொக்குவில் கிழக்கில் காணி விற்பனைக்கு
கொக்குவில் நந்தாவில் வீதியில் 1.2 பரப்பு மற்றும் 2.25 பரப்பு காணிகள் சுற்றுமதில் மற்றும் கிணற்றுடன் விற்பனைக்கு உள்ளது. விருப்பம் உள்ளவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். தரகர்கள் தேவையில்லை.
T.I.குமார்
077 771 0785
077 979 8053

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2508)

யாழில் மொறாயஸ்
MORAIS OPTICALS
யாழ். நகரில் மீண்டும் மொறாய்ஸ் பல் மூக்குகண்ணாடியகம் வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார், keells அருகில் இயங்கிக் கொண்டிருப்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். வாசிப்பதற்கு மட்டும் உரிய கண்ணாடிகள் 800 ரூபாவுடன் பாடசாலை மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு. அத்துடன் தொலைபேசி, தொலைக்காட்சி, கணனி போன்ற பயன்பாடுகளுக்கு ஏற்ப UTMC மற்றும் Blue cut வகையான கண்ணாடிகளும் குறைந்த விலையில் வழங்கப்படுகிறது என்பதனையும் அறியத் தருகிறோம்.
No.334, Clock Tower Road, wellington Junction, Jaffna.
077 484 5379, 021 222 7893
(3707)

காணி விற்பனைக்கு
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள பலாலி வீதியிலிருந்து 40m தொலைவில் HNB வங்கிக்கும் Sunway Supermarket க்கும் மிக அருகில்
● வெட்டுக்கிணறு
● சுற்றுமதிலுடன் கூடிய
● ஒரு குடும்பம் வசிக்கக்கூடிய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
● விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு : 077 690 1708
(3709)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org